**கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம் - 2025**

---

கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய 3806 ஆம் இலக்க (எஸ்எவ்) கடன் உடன்படிக்கையின் 4.02(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து அமைச்சு (MOT) செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. முன்னேற்றப்பட்ட செயற்பாட்டு வினைத்திறன், வலுப்படுத்தப்பட்ட பராமரிப்பு இயலளவு, முன்னேற்றப்பட்ட புகையிரத பாதுகாப்பு, தரமுயர்த்தப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிலையம் மற்றும் வலுப்படுத்தப்பட்ட செயற்திட்ட அமுல்ப்படுத்தல் இயலளவு மற்றும் எதிர்கால புகையிரத செயற்திட்டங்களின் தயார்ப்படுத்தல் என்பவற்றினை உள்ளடக்கி அமுல்ப்படுத்தப்படுகின்ற புகையிரத வலையமைப்பின் வினைத்திறன், நிலைத்திருக்கும் தன்மை மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். இச்செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 31 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 40,186.81 மில்லியனுக்குச் சமமான அமேரிக்க டொலர் 134.22 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 37,426.25 மில்லியனுக்குச் சமமான அமேரிக்க டொலர் 125 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் (ஏடிபீ) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 2,760.56 மில்லியனிற்கு சமமான அமேரிக்க டொலர் 9.22 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 செப்தெம்பர் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் 2026 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டத்தின் கடன் முடிவுறுத்தல் திகதியானது 2027 ஜுன் 30 ஆந் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டுள்ளது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு. அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் / கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | செயற்திட்டச் செலவுகள் தொடர்பான ரூபா 24.85 மில்லியன் முன்னைய ஆண்டுச் சீராக்கல், செயற்திட்டச் செயற்பாட்டுச் செலவாக அங்கீகரிக்கப்படவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ள சொத்துக்கள் அந்தத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளன. | 24.85 | இது முன்னைய ஆண்டுச் சீராக்கல் ஆகும். கண்டியை அண்டிய புகையிரத பாதை செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்புக்கான பெறுமதி சேர் வரி (VAT) செலுத்துதல் நிறுத்தப்பட்டதே இவற்றுக்கிடையேயான வேறுபாட்டிற்கான காரணங்களாகும். நிதிக்கூற்றுக்களில் இந்தச் சீராக்கல் சரியானது. | சரியான பெறுமதி கணக்கிடப்பட வேண்டும். |
| (ii) | முன்னைய ஆண்டுக்குரிய ரூபா 27.88 மில்லியன் செலவு, மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் செயற்திறனை மேம்படுத்தும் செலவினம் அந்தத் தொகையினால் மிகைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. | 27.88 | செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் 2026 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டிறுதிக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டு தொடர்பான செலவினமானது முன்னைய ஆண்டு கொடுக்கல் வாங்கலாகச் சீராக்கப்பட வேண்டும். |

### 2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்

| | நிதிக்கூற்றுக்களின் படி பெறுமதி | தொடர்புடைய பதிவுகளின் படி பெறுமதி | தொடர்புடைய பதிவுகளின் விளக்கம் | முகாமைத்துவத்தின் பதில | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | அமேரிக்க டொலர் 81.07 மில்லியன் | அமேரிக்க டொலர் 83.50 மில்லியன் | ADB இலிருந்து பெறப்பட்ட நிதிகள் தொடர்பான கடன் நிதிகளின் விரிவான கணக்கு இணக்கம். | ADB LIFS முறைமையில் பெறப்பட்ட முற்பணத்திற்கு எதிராகக் கணக்களிக்கப்படாத செலவினமே இவற்றுக்கிடையேயான வேறுபாட்டிற்கான காரணமாகும். | சரியான பெறுமதி கணக்கில் பதிவு செய்யப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | நடவடிக்கை | 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/கணக்காய்வு விடயம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள்/சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் அலகுகள்/சதவீதம் | | |
| செயற்திட்டத்தின் ஒட்டு மொத்த பௌதீகச் செயல் திறன் | 31 செயற்பாடுகள் | 100 சதவீதம் | 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை | ரூபா 32,241,895,116 செலவில், 31 முக்கியப் பணிகளின் கீழ் செயற்திட்டச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டு, 2025 திசெம்பர் 31 ஆம் திகதியை நிறைவுத் திகதியாகக் கொண்டிருந்த போதிலும், ரூபா 2,312,347,053 பெறுமதியிலான 03 பணிகள் நிதி அல்லது பௌதீக முன்னேற்றம் எதனையும் அடையவில்லை. ரூபா 9,324,885,477 பெறுமதியிலான 04 | • அங்கீகார தாமதங்கள்.<br>• நடைமுறைப்படுத்தும் போதான சவால்கள்.<br>• மைல்கல் அடிப்படையிலான கட்டண ஏற்பாடுகள்.<br>• ஒப்பந்தக் கையெழுத்திடுவதில் ஏற்பட்ட தாமதம் அல்லது நடைமுறையில் |

| | | |
|---|---|---|
| | பணிகள் பூர்த்தியாக்கப்படவில்லை அவற்றின் பௌதீக முன்னேற்றம் 30 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையிலும், நிதி முன்னேற்றம் 0 முதல் 51 சதவீதம் வரையிலும் காணப்பட்டது. ரூபா 1,154,868,921 பெறுமதியைக் கொண்ட 04 பணிகளின் பௌதீக முன்னேற்றம் 100 சதவீதத்தை அடைந்திருந்த போதிலும், அச்செயல்பாடுகளின் நிதி முன்னேற்றம் 59 முதல் 79 சதவீதம் வரை மட்டுமே காணப்பட்டது. இது செயற்திட்டத்தின் நிதிச் செலவினங்களின் கீழ் ஒப்பந்த உறுதிக் கட்டணங்கள் அதிகரிப்பதற்கு வழிவகுத்தது | உள்ள பெறுகை நடவடிக்கைகள்.<br><br>• ஒப்பந்தங்கள் குறிப்பிடத்தக்க அல்லது முழுமையான பௌதீக முன்னேற்றத்தை அடைந்திருந்த போதிலும், ஒப்பந்த நிபந்தனைகள், நிலுவையில் உள்ள மைல்கற்கள் அல்லது இறுதி ஏற்புத் தேவைகள் காரணமாக அவற்றுக்கான கொடுப்பனவுகள் பிற்போடப்பட்டு ள்ளமை. |

**முகாமைத்துவத்தின் பதில்**

2025 ஆம் ஆண்டில் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்களுக்கு இடையிலான வேறுபாட்டிற்கான முக்கிய காரணங்கள் அங்கீகார தாமதங்கள், நடைமுறைப்படுத்தும் போதான சவால்கள் மற்றும் மைல்கல் அடிப்படையிலான கட்டண ஏற்பாடுகளாகும். ஒப்பந்தக் கையெழுத்திடுவதில் ஏற்பட்ட தாமதம் அல்லது நடைமுறையில் உள்ள பெறுகை நடவடிக்கைகள் காரணமாக சில ஒப்பந்தங்கள் எந்தவித நிதி முன்னேற்றத்தையும் பதிவு செய்யவில்லை. வேறு சில ஒப்பந்தங்கள் குறிப்பிடத்தக்க அல்லது முழுமையான பௌதீக முன்னேற்றத்தை எட்டியிருந்த போதிலும், ஒப்பந்த நிபந்தனைகள், நிலுவையில் உள்ள மைல்கற்கள் அல்லது இறுதி ஏற்புத் தேவைகள் காரணமாக அவற்றுக்கான கொடுப்பனவுகள் பிற்போடப்பட்டுள்ளன. இதன் விளைவாக, அந்த ஆண்டில் அடையப்பட்ட பௌதீகச் செயலாற்றலின் உண்மையான அளவை நிதி முன்னேற்றம் முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

செயற்திட்டச் செயற்பாடுகள் நன்கு திட்டமிடப்பட்டு, எவ்வித தாமதமுமின்றி இலக்குத் திகதிக்குள் அல்லது அதற்கு முன்பாக பூர்த்தியாக்கப்பட வேண்டும்.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | **செயற்திட்டத்தின் இலக்கைத் தீர்மானிப்பதற்கான அடிப்படை, செயற்திட்ட நோக்கங்கள் மற்றும் முன்னுரிமைத் செயற்திட்டங்களின்படி செயற்படுதல்.** | | |

2019 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட அமேரிக்க டொலர் 160 மில்லியனானது, பொருளாதார நெருக்கடி காரணமாக 2021 இல் அமேரிக்க டொலர் 125 மில்லியனாகக் குறைக்கப்பட்டது. செயற்திட்டத்தின் இலக்கு 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று திட்டமிட்டபடி பூர்த்தியாக்கப்படாததால், செயற்திட்டக் காலம் 2026 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | | |
|---|---|---|
| (அ) 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்குள் பூர்த்தியாக்கத் திட்டமிடப்பட்டிருந்த CSREIP இன் செயற்பாடுகள், செயற்திட்டத்தின் பல செயற்பாடுகளின் மெதுவான முன்னேற்றம் காரணமாக 2026 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டன. இதன் விளைவாக, செயற்திட்டத்தின் வட்டியானது அமேரிக்க டொலர் 7.96 மில்லியனில் இருந்து அமேரிக்க டொலர் 16 மில்லியனாக 100 சதவீதத்தாலும், ஒப்பந்த உறுதிக் கட்டணங்கள் அமேரிக்க டொலர் 0.74 மில்லியனிலிருந்து அமேரிக்க டொலர் 1.03 மில்லியனாக 39 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன. இதனால், மொத்த நிதிக் கட்டணங்கள் அமேரிக்க டொலர் 8.71 மில்லியனிலிருந்து அமேரிக்க டொலர் 17.03 மில்லியனாக 96 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. அதற்கமைய, 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, நிதிக் செலவு கூடுதலாக அமேரிக்க டொலர் 8.32 மில்லியனை ஏற்படுத்தியுள்ளதுடன், செயற்திட்டத்தின் நிதிக் செலவு மொத்தக் கடன் தொகையின் 7 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாக அதிகரித்துள்ளது. | 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு, இச் செயற்திட்டம் அண்ணளவாக 80 சதவீத பௌதீக முன்னேற்றத்தையும் 55 சதவீத நிதி முன்னேற்றத்தையும் அடைந்திருந்தது. எனவே, முழுச் செயற்திட்டமும் மெதுவான முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது என்று முடிவுக்கு வருவது பொருத்தமானதொன்றில்லை.<br><br>இரண்டு பிரதான செயற்பாடுகள் தாமதங்களை எதிர்கொண்ட அதேவேளையில், இக்காலப்பகுதியில் பெரும்பாலான ஒப்பந்தங்கள் வெற்றிகரமாக பூர்த்தியாக்கப்பட்டன. மேலும், இத்தகைய சூழ்நிலைகளின் அடிப்படையிலேயே செயற்திட்ட நீடிப்பு வழங்கப்பட்டதுடன், மிகுதியாகவுள்ள கடன் நிதியைக் கோட்டை புகையிரத நிலையத்தின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்துவதற்கான தீர்மானமும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது. | செயற்திட்டத்தின் நோக்கங்கள் செயற்திறன் மற்றும் வினைத்திறனான முறையில் அடையப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்துடன், அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குக் கிடைக்கக்கூடிய நிதியானது திட்டத்தின் நிதிக் செலவுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. | | |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டில் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, புகையிரதப் பராமரிப்பு அளவினை அதிகரித்தல், புகையிரத செயற்பாட்டையும் பயணிகள் பாதுகாப்பையும் மேம்படுத்துதல், பயிற்சி நிலையங்களை மேம்படுத்துதல் மற்றும் உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்காக அமேரிக்க டொலர் 30.58 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், நீண்ட கால அடிப்படையில் நன்மை பயக்கும் அந்த மூலதனச் சொத்துக் கொள்வனவு மற்றும் மனித வள அபிவிருத்தி நடவடிக்கைகள் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முற்றிலுமாக நீக்கப்பட்டிருந்தன. குறுகிய கால மூலதனப் பராமரிப்புக்காக அமேரிக்க டொலர் 2.06 மில்லியனும் அதிகரித்த நிதிச் செலவுகளை ஈடுகட்டுவதற்காக அமேரிக்க டொலர் 8.32 மில்லியன்களும் ஆலோசனைச் சேவைகளுக்காக அமேரிக்க டொலர் 9.6 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன. | பொருளாதார நெருக்கடிக் காலப்பகுதியில், அவசர உதவிக்காகக் கடன் தொகையின் ஒரு பகுதி மாற்றாப்பட்டது. இதன் விளைவாக, கடன் ஒதுக்கீடு குறைக்கப்பட்டதுடன், இலங்கை புகையிரதத் செயற்திட்டச் செயற்பாடுகள் மீள முன்னுரிமைப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக, புகையிரத சேவையை நடாத்துவதற்குப் பராமரிப்பு மிக முக்கியமான காரணியாக இருப்பதால், பயிற்சி நிலைய அபிவிருத்தி பகுதிக்கான முன்னுரிமை குறைக்கப்பட்டு, பயிற்சிப்பட்டறை அபிவிருத்தி பகுதியானது முன்னுரிமைப்படுத்தப்பட்டது. மீகுதியாகவுள்ள நிதி சிறிய அளவிலான நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் அடையப்பட வேண்டும். |
| (இ) | அமேரிக்க டொலர் 6.30 மில் லியன்களைப் பயன்படுத்தி, 2019 நவம்பர் 28 ஆம் திகதி தொடக்கம் 18 மாதங்களுக்குள் பூர்த்தியாக்கத் திட்டமிடப்பட்ட கண்டி புகையிரதப் பாதையை அபிவிருத்தி செய்வதற்கான விரிவான செயற்திட்டங்களைத் தயாரிக்கும் ஆலோசனைச் சேவை, வெளியீடு 5 இன் கீழ் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 5 ஆண்டு | கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலோசனை ஒப்பந்தம், சர்வதேச ஆலோசகர்களின் அணிதிரட்டலையும் செயல்திறனையும் குறிப்பிடத்தக்க அளவில் பாதித்தது. தொற்றுநோய் காலத்தில் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அரசாங்கம் பின்னர் ஒப்பந்தத்தைச் | விரும்பிய இலக்குகளை அடைவதற்கும், அவசியமற்ற செலவுகளைக் குறைப்பதற்கும் செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்குமான ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| காலப்பகுதிக்கு ரூபா 694,352,490 செலவிடப்பட்ட பின்னர் 2023 ஆம் ஆண்டில் ஆலோசனை சேவை கம்பனியினால் இடைநிறுத்தப்பட்டது. மலையக புகையிரத அபிவிருத்தி மூலம் கண்டி நகர்ப்பகுதிப் போக்குவரத்து நெரிசலுக்கு நிலையான தீர்வுகளை வழங்குவதன் மூலம் போக்குவரத்துத் துறையின் வளர்ச்சிக்குப் பங்களிக்கும் நோக்கத்துடன் இச்செயற்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட இந்த உப செயற்திட்டம், விரும்பிய இலக்குகளை அடையாமல் நிறுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக ஏற்பட்ட நேர்ச் செலவினமும் காலதாமதங்கள் காரணமாக ஏற்பட்ட நிதிச் செலவினமும் இதுவரை பணமாக வீண்விரயமாகியுள்ளன | செயற்படுத்துவதை இடைநிறுத்தியது. அதன் பின்னர், பொருளாதார நெருக்கடியானது ஆலோசகர்களின் பணிகளை மேற்கொள்ளும் திறனை மேலும் பாதித்தது. இதன் விளைவாக, சர்வதேச ஆலோசகர்களால் சரியான ஒப்பந்தக் காலத்திற்குள் தேவையான வெளியீடுகளை பூர்தியாக்க முடியாமல் போனதுடன், ஒப்பந்த நீடிப்பானது தேவைப்பட்டது. தற்போது, ஆலோசகர், அமைச்சு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்டுள்ளனர், மேலும் ஒப்பந்தத்தில் மேலும் அதிகளவிலான பிற்சேர்க்கை கையெழுத்திடப்பட்டவுடன் ஆலோசனைச் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஈ) புகையிரத திணைக்களத்தின் நிதி நிலைபேறானதன்மை மற்றும் செயற்பாட்டுத் திறனுக்காக இரண்டு புதிய ஆலோசனைச் சேவைகளைத் செயற்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2025 பெப்ரவரி 21 ஆம் திகதிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பணிநோக்கு அறிக்கையின் மற்றும் 2025 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டச் செயற்பாட்டு கையேட்டிற்கு இணங்க, 2025 ஆம் ஆண்டுக்கான பெறுகைத் திட்டம் அதற்கேற்ப திருத்தப்படவில்லை. | உடன்படுகிறேன். சில ஆலோசனைக் பணிகள் உண்மையான தேவைகளின்படி நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்கமைய, செயற்திட்ட வழிகாட்டற் குழுவின் அனுமதியுடன் பல தனிப்பட்ட ஆலோசனைத் தேவைகள் நிறுத்தப்பட்டன. | வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) **இலங்கை புகையிரதத்திற்கான டீசல் ஜெனரேட்டரை (ஒலித் தடுப்பு வசதியைக் கொண்ட 150 kVA) வழங்குதல், நிறுவுதல் மற்றும் இயக்கத்திற்குக் கொண்டுவருதலுக்கான பெறுகை.** | | |

| | | |
|---|---|---|
| (அ) விலைமனுக்கோரும் முறையின் கோரிக்கையின்படி பெறுகைச் செயன்முறை 2020 ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது விலைமனுக்களைக் கோருவதற்கு 27 மாதங்களும், ஏலங்களை மதிப்பீடு செய்வதற்கு 09 மாதங்களும், ஒட்டுமொத்த பெறுகைச் செயல்முறையை பூர்தியாக்க 36 மாதங்களும் எடுக்கப்பட்டன. 2024 பெப்ரவரி 14 ஆம் திகதி அன்று தேசிய போட்டி ஏல முறையின் கீழ் ஏலங்கள் மீண்டும் கோரப்பட்ட பின்னர், அவை மதிப்பீடு செய்யப்பட்டு, திருப்திகரமாகப் பதிலளித்த ஏலதாரருக்கு 2024 ஜூலை 09 ஆம் திகதியன்று ரூபா 12,791,351 விலையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஏலங்களைக் கோருவதற்குச் சரியான பெறுகைச் முறையைத் தேர்ந்தெடுக்கத் தவறியமை மற்றும் ஏல மதிப்பீட்டுச் செயல்முறையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, ஒப்பந்தத்தை வழங்குவதற்கு 48 மாதங்கள் என்ற அசாதாரண காலப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது. | இந்த முறை இரத்மலானையில் உள்ள ஜெர்மன் புகையிரத தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நிதியுதவி பெறும் திட்டத்தின் ஒரு பகுதியாக 2020 இல் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 150 kVA ஜெனரேட்டரைக் பெறுகை செய்வதில், பதிலளிக்காத உள்நாட்டு ஏலங்கள், கோவிட்-19 இடையூறுகள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால் பல தாமதங்கள் ஏற்பட்டன. இது செயற்திட்ட நிதியை மீளமைக்கச் செய்தது. பரந்த அளவிலான செயற்திட்டம் நிறுத்தப்பட்ட போதிலும், ஜெனரேட்டர் பெறுகை ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டுதல்களின் கீழ் முன்னெடுக்கப்பட்டு மீண்டும் ஏலத்திற்கு விடப்பட்டது. ஏற்றுக்கொள்ளல் கடிதம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அமைச்சு, சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அனுமதி மற்றும் 2026 ஜனவரி 21 ஆம் திகதியன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் இறுதி அங்கீகாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய நீண்ட திருத்த மற்றும் மீளாய்வு செயல்முறைக்கு ஒப்பந்தம் உட்படுத்தப்பட்டு, 2026 பிப்ரவரி 11 ஆம் திகதியன்று அதிகாரப்பூர்வமாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதில் முடிவடைந்தது. | பெறுவனவுகள் திட்டமிடப்பட்டவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டும். |
| (ஆ) அரசாங்கப் பெறுகை வழிகாட்டல் களின் பிரிவு 8.9.1 (ஆ)-இன் படி, ரூபா 500,000 பெறுமதியை விஞ்சுகின்ற பொருட்கள் அல்லது சேவைகளுக்கு முறையான எழுத்துமூலமான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். மேலும், இப்பெறுகைக்கான ஏல ஆவணங்களில் உள்ள ஏலதாரர்களுக்கான | ஒப்பந்தம் வழங்கப்பட்டு ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, ஒப்பந்தத்தைச் திறம்படச் செயல்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும், ஏதேனும் திருத்தங்களை இணைத்து, ஒப்பந்த முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட வேண்டும். ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதே இக்காலப்பகுதியில் | ஒப்பந்தம் வழங்கப்பட்டவுடன் உடனடியாக ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். |

அறிவுறுத்தல்களின் பிரிவு 42.3 இன் பிரகாரம், முறையான ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் வரை ஒப்பந்த வழங்கல் அறிவிப்பு ஒரு பிணைப்புமிக்க ஒப்பந்தமாகும், மேலும் வாங்குபவர் ஒப்பந்த வழங்கல் அறிவிப்புக்குப் பிறகு உடனடியாக ஒப்பந்த உடன்படிக்கையை வெற்றிகரமான ஏலதாரருக்கு அனுப்ப வேண்டும், அதை அவர்கள் பெற்றுக்கொண்டு 28 நாட்களுக்குள் கைச்சாத்திட்டு வாங்குபவருக்குத் திருப்பியனுப்ப வேண்டும். எவ்வாறாயினும், 2024 அக்டோபர் 21 ஆம் திகதியன்று வழங்குனருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு 13 மாதங்கள் கடந்திருந்த போதிலும், கணக்காய்வு தினத்தின்படி குறிப்பிடப்பட்ட அவ்விதிகளின் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், ஒப்பந்தம் தொடர்பான ஏல ஆவணங்களில் உள்ள பிரிவு 6, வகை 2 இன் படி, தொடர்புடைய வழங்கல் விநியோகிக்கப்பட வேண்டிய குறிப்பிட்ட திகதியும் குறிப்பிடப்படவில்லை.

(iii) **இரத்மலானை புகையிரத டீசல் அலகு (DMU) தொழிற்சாலையை வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதற்கான பெறுகை.**

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையியல் பெறுகை குழுவின் அனுமதியுடன், இரத்மலானை புகையிரத டீசல் அலகு (DMU) தொழிற்சாலையை வடிவமைத்து நிர்மாணிப்பதற்காக ஒரு வெளிநாட்டு ஒப்பந்தக்காரருடன் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்திடப்பட்டது. இதன் ஒப்பந்த பெறுமதி ரூபா 2,040,693,262 அதாவது அமேரிக்க டொலர் 2,776,449.44 க்குச் சமமானது ஆகும். மேலும், இது 365 நாட்களுக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ) அரச பெறுகை வழிகாட்டல்களின் பிரிவு 2.3.1(ஆ) இன் படி, தளத்தைத் தூய்மைப்படுத்தும் மற்றும் இடிக்கும் பணிகள் ஆரம்பிப்பதற்கு கட்டுமானத்தைத் பிரச்சினையாக இருந்தது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி அலுவலகம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) அனுமதி பெற பல மாதங்கள் ஆனது. தற்போது ஒப்பந்தம் நிறைவடையவிருக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| | பெறுகை நிறுவனத்தால் திட்டத்தைச் சீராக நடைமுறைப்படுத்துவதற்கான அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாக்கப்பட்டிருப்பதை உறுதி செய்ய வேண்டும். இரத்மலானை பயிற்சிப்பட்டறை வளாகத்தில் இந்தக் கட்டுமானத்திற்கான ஒப்பந்தம் 2023 திசெம்பர் 27 ஆம் திகதியன்று ஒப்பந்தக்காரருடன் கையெழுத்திடப்பட்டது மற்றும் ஒப்பந்தக்காரர் பணியைத் ஆரம்பிப்பதற்காகக் குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி முன்மொழியப்பட்ட வளாகம் தூய்மைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். தாமதங்களால் ஏற்படும் எந்தவொரு ஒப்பந்தக் கடப்பாட்டையும் தவிர்ப்பதற்காக, ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன்பும் கூட, முன்மொழியப்பட்ட கட்டுமானத் தளத்திற்காக வளாகத்தைத் தூய்மைப்படுத்துமாறு புகையிரத திணைக்களத்தின் பொது முகாமையாளருக்கு 2023 திசெம்பர் முதல் பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், முறையற்ற தூய்மைப்படுத்தல் மற்றும் தாமதங்கள் காரணமாக ஒப்பந்தக்காரர் கட்டுமானப் பணியை பூர்த்தி செய்வதில் தாமதம் ஏற்பட்டது. | ஆரம்பத்தில் இலங்கை புகையிர திணைக்களம் மற்றும் ஒப்பந்தக்காரரின் பொறுப்புகளுக்கு இடையே பிரித்து வைக்கப்பட்டிருந்தன. சில தளத் தூய்மைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு இரு தரப்பினரின் ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவைப்பட்டன, மேலும் இந்த நடவடிக்கைகளை உரிய நேரத்தில் பூர்த்திசெய்வதில் ஏற்பட்ட சவால்கள் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டன.<br><br>எவ்வாறாயினும், தளத்தைத் தூய்மைப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவதைப் பாதிக்கவில்லை, ஏனெனில் ஒப்பந்தக்காரர் கட்டுமானப் பணிகளைத் ஆரம்பிப்பதற்குத் தேவையான நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (UDA) அனுமதிகளையும் ஒப்புதல்களையும் பெறுவதற்கு இக்காலப்பதியைப் பயன்படுத்திக் கொண்டார். | முன் கட்டுமானத் தளம் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | தொழிற்சாலைக்கு இரண்டு மேல் நிலை பாரம் தூக்கிகளை வழங்குவதற்காக, புகையிரத் திணைக்களத்தின் அனுமதியுடன் ஐந்து வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். ஒப்பந்தக்காரர் உற்பத்தியாளர்களில் ஒருவரிடமிருந்து பெறுகை செய்வதற்கான அனுமதியைக் 2025 ஜனவரி 21 ஆம் திகதியன்று கோரியிருந்த போதிலும், அதற்கான அங்கீகாரம் 2025 ஜூன் 24 ஆம் திகதி வரை | உடன்படுகிறேன். நீண்ட காலப்பகுதியில், ஒப்பந்தக்காரர் வழங்குனர்கள் மற்றும் உற்பத்தி செய்யும் நாடுகளில் மாற்றங்களை முன்மொழிந்து பல கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தார். இதன் விளைவாக, ஏல ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை அவை முழுமையாகப் பூர்த்தி செய்கின்றனவா என்பதைச் சரிபார்க்க, முன்மொழியப்பட்ட பாரம் தூக்கிகளின் விவரக்குறிப்புகள் ஜனவரி 2021 இல் இலங்கை புகையிரத | அங்கீகாரங்கள் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தாமதப்படுத்தப்பட்டது இதன் விளைவாக பாரம் தூக்கிகள் வழங்குவதிலும் நிறுவுவதிலும் தாமதங்கள் ஏற்பட்டன. | திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டன. தனது மீளாய்வை பூர்த்திசெய்து இறுதி முடிவை வழங்குவதற்குத் திணைக்களம் அண்ணளவாக ஐந்து மாதங்கள் தேவைப்பட்டது. | |
| (இ)ஒப்பந்தத்தின் படி ரூபா 2,040,693,263 பெறுமதியுள்ள முழுப் பணியும் 2024 திசெம்பர் 27 ஆம் திகதியினுள் பூர்த்தியாக்கப்பட்டிருக்க வேண்டும். திட்ட முகாமைத்துவம், புகையிரத திணைக்களம் மற்றும் ஒப்பந்தக்காரர் ஆகியோரின் தாமதங்கள் காரணமாக ஒப்பந்தக் காலம் பல முறை நீடிக்கப்பட்டு, 2 1/2 ஆண்டுகள் (30 மாதங்கள்) கால நீடிப்பு வழங்கப்பட்டது. அதற்கமைய ஒப்பந்தம் 2026 ஜுலை 27 ஆம் திகதிக்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். 2026 பெப்ரவரி நிலவரப்படி செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றம் 85 சதவீதமாக இருந்தபோதிலும், உண்மையான பௌதீக முன்னேற்றம் 63 சதவீதம் மட்டுமே இருந்தது. | இரத்மலானை புகையிரத இரத்மலானை புகையிரத டீசல் அலகு (DMU) பயிற்சிப்பட்டறை கட்டுமானம், ஊழியர் பற்றாக்குறை மற்றும் மோசமான வானிலை காரணமாக தாமதங்களை எதிர்கொண்டது. இது முக்கிய கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தைப் பாதித்தது, இதன் விளைவாக பௌதீக முன்னேற்றம் தாமதமானது. ஒப்பந்தக்காரர் கூடுதல் வளங்கள் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட வேலை அட்டவணைகளை உள்ளடக்கிய திருத்தப்பட்ட பிடிப்புத் திட்டத்தை சமர்ப்பித்தார். அதனை நடைமுறைப்படுத்தியதைத் தொடர்ந்து, தற்போது 73 சதவீத பௌதீக முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது. | குறித்த செயற்திட்ட முன்னேற்றம் அடையப்பட வேண்டும். |

## 3.3 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசின் நிதிகளிலிருந்து முறையே ரூபா 11,475 மில்லியன் மற்றும் ரூபா 50 மில்லியன் தொகைகள் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், உண்மையான செலவினம் முறையே ரூபா 5,623.26 மில்லியன் மற்றும் ரூபா 14.84 மில்லியன் ஆகும். இதன் விளைவாக, பாதீட்டு ஒதுக்கீடுகளில் முறையே ரூபா 5,851.74 மில்லியன் (51 சதவீதம்) மற்றும் ரூபா 35.16 மில்லியன் (70 சதவீதம்) குறைவாகப் பயன்படுத்தபட்டுள்ளது. அதற்கமைய, ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் ஒதுக்கீடுகள் மற்றும் அரச நிதிகளை நிதி மற்றும் அமையச் செலவுகளுடன் திறம்படப் பயன்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட பாதீட்டு ஆவணம், ஒரு பயனுள்ள | செயற்திட்டம் மற்றும் ஒதுக்கப்பட்ட பாதீட்டுத் திட்டத்திற்கு ஏற்ப நாங்கள் ஏற்கனவே விநியோக அட்டவணையைத் தயாரித்துள்ளோம். நீங்கள் அவதானித்தது போல், ஒப்பந்தக்காரர்களின் செயற்திறன் காரணமாக இதில் விலகல் ஏற்பட்டிருக்கலாம். | பாதீட்டு ஒதுக்கீடுகள் செயற்திறன் மற்றும் வினைத்திறனான முறையிலும் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுப்பாட்டுக் கருவியாகத் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | கடன் ஒப்பந்தத்தின்படி, ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படும் கடன் வசதிகளைப் பயன்படுத்துவதில் உள்ள செயற்திறன் குறைபாட்டின் அடிப்படையில், செயற்திட்டம் தொடர்பான செயற்திறன் கட்டணமாக 0.15 சதவீதத்தை கடன் வாங்குபவர் செலுத்த வேண்டும். அதற்கமைய, மீளாய்வு செய்யப்படும் ஆண்டுக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியால் செய்யப்பட்ட பாதீட்டு ஒப்பந்த உறுதிக் கட்டணங்கள் அமேரிக்க டொலர்கள் 70,000 ஆகும். எவ்வாறாயினும், உண்மையான ஒப்பந்த உறுதிக் கட்டணங்கள் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபாய் 27,385,259 க்குச் சமமான அமேரிக்க டொலர் 91,395.82 ஆகும். மேலும், அதிகளவிலான ஒப்பந்த உறுதிக் கட்டணங்கள ரூபாய் 6,416,235 க்குச் சமமான அமேரிக்க டொலர்கள் 21,395.82 ஆகும். | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. திட்டமிடப்பட்ட அட்டவணையின்படி ஒப்பந்தக்காரர்களின் மோசமான செயற்திறன் காரணமாக இது நிகழ்ந்துள்ளது. | ஒப்பந்த உறுதிக் கட்டணங்களைக் குறைக்க செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை விரைவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |